மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2020ம் வருடம் மார்ச் மாதம் 07 ஆம் நாள் சனிக் கிழமை

**I.A . No. 176/2020**
**in**
**I.A. No. 298/2019**
**in**

**O.S. No. 106/2018**

துளசிதாஸ்
(மேற்படி துளசிதாஸ் அவர்களின்
பொது அதிகார முகவரான M. சாந்தி மூலமாக)
..... மனுதாரர்/1ம் பிரதிவாதி

//எதிர்//

ரா. சந்திரா .... எதிர்மனுதாரர்/வாதி
ஆ. மாயாண்டி

.... எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி

இம்மனு 24.01.2020ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G. மூவேந்தன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M. தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், கடந்த 03.03.2020ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இம்மனு, உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 148ன்படி, இடைக்கால மனு எண். 298/2019ல் கடந்த 09.01.2020ம் தேதியன்று பிறப்பித்த நிபந்தனை உத்தரவினை மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் நிறைவேற்றுவதற்கு மேற்படி மனுவினை காலநீட்டிப்பு செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதார் தரப்பில் மனுவின் சுருக்கமும் வாதுரையும் :**

மனுதார் அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி என்றும், அசல் வழக்கானது பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி தாவா சொத்தில் உள்ள வாதியை சட்டப்பூர்வமான வழிகளை தவிர வேறு வழிகளில்

வெளியேற்றம் செய்யக்கூடாது என அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இடைக்கால மனு I.A. No. 403/2018ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 1ம் பிரதிவாதி இலங்கை வாழ் குடியுரிமை பெற்ற நபராக இருந்து வருவதாலும், மேற்படி தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியமானதாக இருந்து வருவதாலும், வழக்கு சொத்தினை நிர்வாகம் செய்வதற்கு 30.07.2018ம் தேதியிட்டு மனுதாரர் பெயருக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டு, அதுவும் சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 21.08.2018ம் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கினை மேல் நடத்த மனுதாரர் தரப்பில் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் மேற்படி மனு மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் அனுமதி கோரி 15 தினங்களுக்குள் தனியாக மனு தாக்கல் செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் கடந்த 09.01.2020ம் தேதியில் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் மேற்படி விபரம் பொங்கல் விடுமுறை கழித்து 20.01.2020ம் தேதியில் தான் மனுதாரருக்கு தெரியவந்ததால், நிபந்தனையின்படி மேற்படி மனு தாக்கல் செய்வதற்கு 1ம் பிரதிவாதியிடம் உடனடியாக கையெழுத்து பெற இயலவில்லை என்றும், எனவே மேற்படி நிபந்தனைபடி மனு தாக்கல் செய்வதற்கு காலநீட்டிப்பு கோரி மனுதாரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதுரைக்கப்பட்டது.

<u>2)எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிர்உரையின் சுருக்கமும் அதன் பேரிலான வாதுரையும்:</u>

மனுவில் கண்டுள்ள விபரங்கள் தவறானது என்றும், அசல் வழக்கானது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தி நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் இடைக்கால மனு I.A. No. 404/2018ன்படியான மனுவில் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்றும் 1ம் பிரதிவாதி தரப்பில் இந்த நிர் மனுவில் சாந்தி என்பவரை வழக்கினை மேல் நடத்த பொது அதிகாரம் வழங்கியுள்ளதாகவும், அதன் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கினை மேல் நடத்த அனுமதி கோரி மனு தாக்கல் செய்து அதுவும், இடைக்கால மனு I.A. No. 289/2019ன்படி கடந்த 09.01.2020ம் தேதியில் 15 தினங்களுக்குள் மேற்படி 1ம் பிரதிவாதி மனுதாரரை வழக்கினை மேல் நடத்த அனுமதிக்ககூடிய வகையில் தனியாக மனு தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் மனுதாரர் தரப்பில்பொங்கல் விடுமுறை முடிந்து 20.01.2020ம் தேதியில் மேற்படி உத்தரவு தெரியவந்ததாக தவறான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளார் என்றும். உண்மையில் 09.01.2020, 10.01.2020ம் தேதிகளுக்கு பின் 13.01.2020ம் தேதியிலிருந்து தான் பொங்கல் விடுமுறை இருந்து வந்தது என்றும், மனுதாரர்/1ம் பிரதவாதி தரப்பில் 1ம்பிரதிவாதியிடம் உடனடியாக கையெழுத்து வாங்க இயலவில்லை என்று பொய்யாக வாதுரைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் 1ம் பிரதிவாதியிடம் கையெழுத்து

வாங்குவதற்கு எந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனையும், அது தொடர்பான விபரங்களையும், அது தொடர்பான ஆதரவுகளையும் மனுவில் குறிப்பிடவில்லை என்றும். எனவே ஏற்கனவே காலஅவகாசம் வழங்கி நிபந்தனை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் காலஅவகாசம் வழங்கப்பட தேவையில்லை வாதியை அலைக்கழிப்பு செய்யும் எண்ணத்துடனும், வழக்கு நடவடிக்கையை காலதாமததப்படுத்தும் எண்ணத்துடனும் பொய்யான சங்கதிகளுடன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே உண்மை விபரங்களை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**3)** இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பொருண்மையாகும்.

**தீர்வு:**

4) இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டதில், இந்த நிர் மனுவும் இடைக்கால மனு எண் I.A. No. 298/19ல் கடந்த 09.01.2020ம் தேதியில் 1ம் பிரதிவாதி தரப்பில் மனுதாரர் வழக்கினை மேல் நடத்துவதற்கு அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மேற்படி 1ம் பிரதிவாதி நேரடியாக எவ்வித மனுவும் தாக்கல் செய்யப்படாததால், 1ம் பிரதிவாதிக்காக மனுதாரர் வழக்கினை மேல் நடத்த அனுமதி கோரும் மனுவினை 1ம்பிரதிவாதி தாக்கல் செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி உத்தரவும் கடந்த 09.01.2020ம் தேதியிலிருந்து 15 தினங்கள் காலஅவகாசம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் 09.01.2020ம் தேதியிலிருந்து இன்றைய தேதி வரை மனுதாரர் தரப்பில் மேற்படி மனு தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் 148ன் நடைமுறைகளை பரிசீலனை செய்யும் போது,

'**Sec. 148.** Enlargement of time – Where any period is fixed or granted by the Court fpr the doing of any act precribed or allowed by this Code, the Court may, in its discretion, from time to time, enlarge such period, **[nor exceeding thirty days in total]**even though the period originally fixed or granted may have expired." எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்டவாறு முன்தீர்ப்பு வழங்கப்பட்டு, **2019(3) L.W. 899 (Mad)** என்ற சட்ட இதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

**Natarajan (vs) Padmalakshmi case** **Section 148** – Scope – Under

section 148 of the code of civil procedure the court canenlarge time only for a maximim period of 30 days.

எனவே சட்டம் அனுமதிக்கும் கால அவகாசமான 30 தினங்கள் என கணக்கீடு செய்யும் பட்சத்தில் மேற்படி மனுதாரர்/1ம் பிரதிவாதி மனு தாக்கல் செய்வதற்கு, மேற்படி கால அவகாசத்திற்கும் கூடுதலாக காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. இருப்பினும் வழக்கு தரப்பினர்களிடையே வழக்கினை நடத்துவதற்கு போதுமான வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும் என்ற சட்ட நிலைப்பாட்டின்படியும் இயற்கை நியதியின்படியும், மனுதாரர்/1ம் பிரதிவாதி 13.03.2020ம் தேதிக்குள் இடைக்கால மனு எண். I.A. 298/19ன் மனுதாரரை பொது அதிகார முகவராக அங்கரித்து வழக்கினை மேல் நடத்த அனுமதி கோரும் மனுவானது தாக்கல் செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் I.A. 298/19 மனு மற்றும் இந்த நிர் மனுவும் தள்ளுபடி செய்யப்படக்கூடியது என உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2020ம் ஆண்டு மார்ச் மாதம் 07ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//